செ.வெ.எண்.21/2017 நாள்:13.04.2017

## பத்திரிகை செய்தி

மின்னணு பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் விதமாக நடைபெறும் DIGIDHAN (டிஜிதான்) மேளாவின் 100-வது நாள் நிறைவு விழா தேசிய அளவில் பாரத பிரதமர் அவர்கள் தலைமையில் நாக்பூரில் 14.04.2017 அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறுகிறது. அவ்விழா நடைபெறும் நேரத்தில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் DDC Hall-ல் Local Function காலை 11.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறுகிறது. தேசிய விழா நிகழ்ச்சிகள் இங்கு நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. தொடர்ந்து, மின்னணு பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் விதமாக முன்னோடி வளர்ச்சியின் மேலாளர்கள் விளக்கம் அளிக்க உள்ளனர். ஆகவே, இந்நிகழ்ச்சியில் வணிகர் சங்க பிரதிநிதிகள், மாணவர் சங்க பிரதிநிதிகள், விவசாய பிரதிநிதிகள், தாழ்த்தப்பட்டோர்/மலைசாதியினர் சங்க பிரதிநிதிகள், இளைஞர் மன்ற பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

::வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.